DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**CC.No.73/2021**

Prosecution **PW.5**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | சுப்புராயன் | கிராமம் : | |
| தந்தை பெயர் : | அம்மையப்பன் | வட்டம் : | |
| மதம் : | | தொழில் : | |
| ஜாதி : | | வயது : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 27.02.2025.
எதிரி ஆஜரில்லை. குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது. வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

1. நான் கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் தாலுக்கா, வீரராக்கியம், காமராஜ் நகரில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். என்னுடன் முனியப்பன் என்பவர் கையொப்பம் செய்தார். 2012ம் வருடம் மாதம், தேதி சரியாக நியாபகமில்லை. லாலாபேட்டை போலிசார் சாமியப்பன் வீட்டில் நடந்த திருட்டு சம்பந்தமாக சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தனர். நானும், முனியப்பனும் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. சாமியப்பன் மாமனார் முறை. சம்பவம் நடந்த அன்று சுமார் 1.00 மணிக்கு சென்றேன். சம்பவம் நடந்த போது நான் வீட்டில் இருந்தேன். நான் போனபோது, சாமியப்பன், அவரது மகன், சாமியப்பன் மச்சினன் மற்றும் கும்பல் இருந்தனர். நான் மட்டும் தான் சென்றேன். நான் போனபோது, போலீசர் விசாரணை செய்து கொண்டிருந்தனர். அவர்கள் வந்ததற்காக கையெழுத்து வாங்கினார்கள். என்ன எழுதியிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் திருட்டுபோனது, ஸ்கெட்ச் வரையப்பட்டது, வந்து சென்றதற்கான கையெழுத்து என

வாங்கினார்கள். நான் கையெழுத்து போட்டபோது வரைந்திருந்தார்கள். சம்பவ இடத்தில் கையெழுத்து வாங்கினார்கள்.

2. நான் சொன்னது போல், நான் 2.30 மணிக்கு அங்கு செல்லவில்லை என்றும், சாமியப்பன் எனது மாமனார் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்னது போல், போலீசார் வரைபடம் வரைந்து, சம்பவ இடத்தில் கையெழுத்து வாங்கவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை : இல்லை.**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

Sd/– M.Santhosham,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.